TAMIL NADU LEGISLATURE LIBRARY
11 APR 1972
MADRAS

THE TAMIL NADU LEGISLATIVE COUNCIL

Monday, the 25th October 1971

The House met in the Council Chamber, Fort St. George, at four of the clock, the DEPUTY CHAIRMAN (THIRU G. KRISHNAMOORTHY) in the Chair.

I. QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS

Cycle Theft.

* 24 *Q.*—THIRU M. ARUMUGASWAMI: Will the Hon, the Chief Minister be pleased to state—

(*a*) the number of cases of cycle thefts registered in Saidapet Police Station in Madras City during 1970;

(*b*) the number of persons so far apprehended; and

(*c*) the action taken thereon?

சைக்கிள் திருட்டு

திரு. எம். ஆறுமுகசாமி: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்.

(அ) சென்னை மாநகரில் 1970-ல் சைதாபேட்டைக் காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட சைக்கிள் திருட்டு வழக்குகள் எத்தனை?

(இ) இதுவரை எத்தனை பேர் கைது செய்யப்பட்டனர்?

(உ) அதன் மீது எடுத்த நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) 19 வழக்குகள்.

(இ) 14 வழக்குகளில் சம்பந்தப்பட்ட 4 பேர் கைது செய்யப் பட்டனர்.

(உ) இந்த நான்கு பேருக்கும் ஆறு திங்களிலிருந்து 3 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. 19 வழக்குகளில் ஐந்து வழக்குகளில் சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் கண்டு பிடிக்கப்படவில்லை.

திரு. எம். ஆறுமுகசாமி: துணைத் தலைவர் அவர்களே, அடிக்கடி இது போன்ற சைக்கிள் திருட்டுக்கள் நடைபெறுகிறபடியால், மாநில முழுவதும் இந்த சைக்கிள் திருட்டுக்களைக் கண்டுபிடிக்கும் வகையில் புது மாதிரி யுத்தியை அரசாங்கம் கையாளுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: சைக்கிளைத் திருடுபவர்களும் இதுபோல யுத்திகளை வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள்.